# இலங்கை புகையிரத சேவை

# பெறுகை அறிவித்தல்

**<u>இலங்கை புகையிரத திணைக்களத்துக்குரிய வளாகத்தை அண்டி அமைந்துள்ள சிறு விற்பனை நிலையங்கள் மற்றும் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக்;குழு விலைமனுக் கோரல்</u>**

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் புகையிரத வளாகத்தை அண்டி அமைந்துள்ள சிறு விற்பனை நிலையங்கள் மற்றும் கடைகளை இரண்டு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன .மேற்கூறிய சிறு விற்பனை நிலையங்கள் மற்றும் கடைகள் தொடர்பிலான தகவல்கள் பெறுகை ஆவணங்களில் அட்டவணை 01 கீழ் காட்டப்பட்டுள்ளன.

| | சிறு விற்பனை நிலையங்கள் மற்றும் கடைகள் | அளவு சதுர அடி |
|---|---|---|
| 01 | கெக்கெனதுர சிறு விற்பனை நிலையம் (நிலையான உணவக கட்டிடம்) | |
| 02 | பம்பரெந்த சிறு விற்பனை நிலையம் (நிலையான உணவக கட்டிடம்) | |
| 03 | வெவ்ருகன்னல சிறு விற்பனை நிலையம் (நிலையான உணவக கட்டிடம்) | |
| 04 | ஹிக்கடுவை சிறு விற்பனை நிலையம் | 100 |
| 05 | பானந்துரை I சிறு விற்பனை நிலையம் (நிலையான உணவக கட்டிடம் | |
| 06 | பானந்துரை II சிறு விற்பனை நிலையம் (கஜூ விற்பனை சாலை இருந்த இடம்) | 35 |
| 07 | மொரட்டுவை சிறு விற்பனை நிலையம் (கஜூ விற்பனை சாலை இருந்த இடம்) | 24 |
| 08 | வெள்ளவத்தை சிறு விற்பனை நிலையம் (கஜூ விற்பனை சாலை இருந்த இடம்) | 28 |
| 09 | பம்பலப்பிட்டிய சிறு விற்பனை நிலையம் (கஜூ விற்பனை சாலை இருந்த இடம்) | 28 |
| 10 | கொள்ளுப்பிட்டிய சிறு விற்பனை நிலையம் (கஜூ விற்பனை சாலை இருந்த இடம்) | 28 |
| 11 | கொழும்பு கோட்டை 72 ஓல்கோட் மாவத்தை போசெவன NLDB பால் விற்பனை நிலையம் இருந்த இடம் | 79 |
| 12 | புகையிரத தலைமையகத்தின் முன்னால் உள்ள சிறு விற்பனை நிலையம் | 332 |
| 13 | இறாகமை சிறு விற்பனை நிலையம் II (2/3 ஆம் மேடை) | 77 |
| 14 | இறாகமை சிறு விற்பனை நிலையம் III (1 ஆம் மேடை புத்தக விற்பனை நிலையம் காணப்பட்ட இடம்)) | 60 |
| 15 | இறாகமை சிறு விற்பனை நிலையம் IV (கஜூ விற்பனை சாலை) | 28 |
| 16 | எண்டேரமுல்லை சிறு விற்பனை நிலையம் | 50 |
| 17 | ஹொரப்பே சிறு விற்பனை நிலையம் | 96 |
| 18 | யாகொடை சிறு விற்பனை நிலையம் | 24 |
| 19 | கம்பஹh புகையிரத நpலையத்திற்கு முன்னால் சிறு விற்பனை நிலையம் (பூ விற்பனை நிலையம் காணப்பட்ட இடம்)) | 300 |
| 20 | வில்வத்தை சிறு விற்பனை நிலையம் | 24 |
| 21 | போத்தலே சிறு விற்பனை நிலையம் | 40 |
| 22 | அலவ்வ சிறு விற்பனை நிலையம் | 24 |
| 23 | குருணாகலை சிறு விற்பனை நிலையம் | 80 |
| 24 | வவுனியா புகையிரத நிலைய சிறு விற்பனை நிலையம் (நிலையான உணவக கட்டிடம்) | |
| 25 | மதவாச்சி சிறு விற்பனை நிலையம் (நிலையான உணவக கட்டிடம்) | |
| 26 | இஹலகோட்டை சிறு விற்பனை நிலையம் | 28 |
| 27 | பேராதெனிய சிறு விற்பனை நிலையம் (நிலையான உணவக கட்டிடம்) | |
| 28 | கண்டி புகையிரத நிலையத்தின் அருகிலான சிறு விற்பனை நிலையம்(மக்கள் வங்கி ATM இயந்திரம் நிறுவப்பட்டிருந்த இடம்) | 150 |
| 29 | தெமோதரை சிறு விற்பனை நிலையம் | 100 |
| 30 | தலவாக்கலை சிறு விற்பனை நிலையம் (நிலையான உணவக கட்டிடம்) | 30 |
| 31 | ஹப்புத்தளை சிறு விற்பனை நிலையம் | 100 |
| | **சிறு விற்பனை நிலையங்கள் மற்றும் கடைகள்** | **அளவு சதுர அடி** |
| 32 | கம்பளை புகையிரத நிலையத்தின் மக்கள் பாலத்தின் அருகில் உள்ள சிறு விற்பனை நிலையம் | 32 |
| 33 | கந்தலை புகையிரத குறுக்கு பதை அருகில் உள்ள சிறு விற்பனை நிலையம் | 200 |
| 34 | கந்தலை சிறு விற்பனை நிலையம் I (புகையிரத நிலையத்திற்கு முன்னால்) | 100 |
| 35 | கந்தலை சிறு விற்பனை நிலையம் II (புகையிரத நிலையத்திற்கு முன்னால்) | 100 |
| 36 | கந்தலை சிறு விற்பனை நிலையம் III (புகையிரத நிலையத்திற்கு முன்னால்) | 100 |
| 37 | கந்தலை சிறு விற்பனை நிலையம் IV (புகையிரத நிலையத்திற்கு முன்னால்) | 100 |
| 38 | கந்தலை சிறு விற்பனை நிலையம் V (புகையிரத நிலையத்திற்கு முன்னால்) | 100 |
| 39 | கந்தலை சிறு விற்பனை நிலையம் VI (புகையிரத நிலையத்திற்கு முன்னால்) | 100 |
| 40 | வேயங்கொடை இலக்கம் 08 உடைய கடை | 330 |
| 41 | வேயங்கொடை இலக்கம் 09 உடைய கடை | 330 |
| 42 | பெஸ்டியன் மாவத்தையில் உள்ள சிறு விற்பனை நிலையம் | 160 |
| 43 | மருதானை சிறு விற்பனை நிலையம் | 100 |
| 44 | பானந்துரை சிறு விற்பனை நிலையம் | 36 |
| 45 | கம்பஹா சிறு விற்பனை நிலையம் | 100 |
| 46 | நானுஓய நடமாடும் விற்பனை வண்டியை நடாத்திச் செல்வதற்காக | 280 |
| 47 | சாலியபுர சிறு விற்பனை நிலையம் | 100 |
| 48 | தெஹிவலை சிறு விற்பனை நிலையம்( பால் விற்னை நிலையம் காணப்பட்ட இடம்) | 153 |
| 49 | தெஹிவலை சிறு விற்பனை நிலையம்( கற்றாழை விற்பனை நிலையம் காணப்பட்ட இடம்) | 60 |
| 50 | மீரிகமை சிறு விற்பனை நிலையம் | 96 |
| 51 | இறாகமை பால் விற்னை நிலையம் | 100 |
| 52 | அஹங்கமை வியாபார நிலைமொன்றிற்கு | 400 |

01. <u>தகைமைகள்</u>

இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

02<u>. கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்.</u>

பெறுகை ஆவணங்களை 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரையில் புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் அல்லது குறித்த புகையிரத நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிடம் அல்லது குறித்த புகையிரத நிலையத்தின் நிலைய அதிபரிடம் மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ.2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடம் அல்லது ஏற்புடைய புகையிரத நிலையத்தின் நிலைய அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உருப்படிகளுக்காகவும் தனித்தனியே விலைமனுக்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதோடு கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்பட வேண்டும். ஒரு விலைமனு கோரலின் மூலம் ஒரு உருப்படிக்கு மாத்திரமே விலை கோர முடியும்.

03. <u>கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்</u>.

மேற்படி 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொவ்வொரு உருப்படி சார்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில், " ..................(விற்பனை நிலையத்தின் பெயர்) தொடர்பிலான விலைமனுக்கோரல்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர் , திணைக்கள பெறுகைக்குழு , விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் , புகையிரத தலைமையகம் ஒல்கோர்ட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.

பெறுகை ஆவணங்கள் 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்க அனுமதிக்கப்படும்.

05.திணைக்கள நிபந்னைகளின் கீழ் அதிகூடிய விலையினை முன்வைத்த விண்ணப்பதாரிக்கு ஏற்புடைய சிறு விற்பனை நிலையமானது தனித்தனியே குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இது தொடர்பான இறுதி தீர்மானம் திணைக்கள பெறுகைக் குழவை சார்ந்ததாகும்..

06. கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்கள் தேவையெனின் இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தின் தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235, 011-4600944 ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,

புகையிரத  தலைமையகம்,
ஓல்கோர்ட்  மாவத்தை , கொழும்பு 10